**உடுபத்தாவ பிரதேச சபை**
**குருநாகல் மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஒக்டோபர் 26 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக்கூற்றுக்களில் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு உடுபத்தாவ பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ரூபா. 1,160,500 கூட்டுப்பெறுமதியான 02 நீர் பௌசர்கள், இயந்திரம் மற்றும் உபகரணங்கள் எனக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது

(ஆ) ரூபா. 45,000 பெறுமதியான 02 நீர்த் தாங்கிகள் மற்றும் ரூபா. 32,000 பெறுமதியான விளையாட்டு உபகரணங்கள் காணி மற்றும் கட்டடங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது

(இ) ஒன்றுசேர்ந்த பெறுமதி ரூபா. 571,180 ஆகவிருந்த 12 சொத்து வகைகள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சபைக்குச் சொந்தமான 53 மயானங்களின் பெறுமதி நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) அரச காரியாலயமொன்றிற்கு நன்கொடையாக வழங்கப்பட்டிருந்த ரூபா. 180,000 பெறுமதியான தூமான இயந்திரம் மீளாய்வாண்டின் இறுதி வரை ஒரு சொத்தாகக் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 இணங்காத கணக்குகள்

மீளாய்வாண்டின் இறுதியில் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த 03 கணக்கு விடயங்களின் மீதிகள் மற்றும் அதனுடன் தொடர்பான பயன்பாட்டுப் பேரேடுகளில் காணப்பட்ட மீதிகளுக்கிடையில் ரூபா. 8,575,443 இணக்கமின்மை காணப்பட்டது.

**1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**(அ) பெற வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டின் இறுதியில் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பெற வேண்டிய மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 103,552,285 ஆகவிருந்ததுடன் இதில் ரூபா. 54,086,277 ஒரு வருடத்திற்கும் மேலான காலத்திலிருந்து நிலுவையாகக் காணப்பட்டது.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டின் இறுதியில் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் செலுத்த வேண்டிய மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 30,064,433 ஆகவிருந்ததுடன் இதில் ரூபா. 9,370,941 ஒரு வருடத்திற்கும் மேலான காலத்திலிருந்து தீர்க்கப்படாதிருந்தது.

**1.3.4 கணக்காய்விற்குத் தேவையான எழுத்து மூல ஆதாரங்கள் காணப்படாமை**

தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாததன் காரணமாக ரூபா. 172,080,220 பெறுமதியான 05 நிதி விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமான முறையில் பரிசீலிக்க முடியாது போனது.

**1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை**

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மை சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டம் | |
| (i) 154 (1) பிரிவு | காணி துண்டாக விற்கப்படும் சந்தர்ப்பத்தில் விற்பனை விலையில் 01 வீதம் அறவிடப்படாதிருந்ததுடன் மதிப்பிடப்பட்ட விற்பனை விலையில் 01 வீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது |
| (ii) 186 பிரிவு | 23 ஏக்கர் 02 ரூட் 13.8 பேர்ச் அளவான 06 வீடுகள் மற்றும் சொத்துக்கள் திருத்தங்களுடன் தொடர்பான காணி ஒழுங்குபடுத்தளுக்காக சபையின் அனுமதியின்றி அபிவிருத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டிருந்ததுடன் அதற்கெதிராக சபை சட்ட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஆ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாக) விதிகள் | |
| (i) 5 (6) விதி | குறிப்பிட்ட காலத்தினுள் பிரதேச சபைக்கு அறவிடப்பட வேண்டிய அனைத்து வருமானங்கள் மற்றும் ஏனைய கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| (ii) 218 விதி | சபையின் அனைத்துக் காணிகள் மற்றும் கட்டிடங்கள் சபை அமைக்கப்பட்ட நாளிலிருந்து இதுவரை பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டிருக்க வில்லை |
| (ஈ) 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | இரண்டு வாகனங்களின் ரூபா 510,065 ஆன உள்ளக திருத்தங்களை மேற்கொள்ளும் போது சுற்றறிக்கை அறிவுறுத்தல்களை மிகைத்து நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை மிஞ்சிய வருமானம் ரூபா 33,295,405 ஆகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரோத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 21,387,478 ஆகக் காணப்பட்டது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரித்தாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் நிலுவை |
| | | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| (i) | வீதவரி மற்றும் வரி | 3,391 | 4,481 | 3,888 | 1,800 | 2,193 | 3,908 | 3,035 | 1,472 |
| (ii) | வாடகை | 11,600 | 10,556 | 10,492 | 137 | 10,600 | 11,243 | 11,918 | 78 |
| (iii) | அனுமதிப் பத்திர கட்டணங்கள் | 768 | 567 | 567 | - | 808 | 1,219 | 1,219 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 73,090 | 77,025 | 50,617 | 101,615 | 64,579 | 69,480 | 66,062 | 87,325 |
| | மொத்தம் | 88,849 | 92,629 | 65,564 | 103,552 | 78,180 | 85,850 | 82,234 | 88,875 |

**குறிப்பு**

2017 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட வருமானத்தினுள் முன்னைய ஆண்டிற்குரியதான ரூபா. 7,626,000 நிலுவை அறவீடுகளும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

#### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

மீளாய்வாண்டில் பட்டியலிடப்பட்ட வருமானம் மற்றும் முன்னைய வருடங்களின் நிலுவை வருமானங்களுடன் ரூபா 181 மில்லியனில் ரூபா 65.5 மில்லியன் சேகரிக்கப்பட்டிருந்தது. இதில் ரூபா. 7.6 மில்லியன் முன்னைய ஆண்டிற்கான வருமானமாக இருந்தது. முன்னைய வருடத்தின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 88 மில்லியனாகவிருந்த பெற வேண்டிய வருமானம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரை ரூபா 103 மில்லியன் வரை அதிகரித்திருந்தது.

**2.2.3 வீதவரி மற்றும் வரி**

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியன்று வீத வரி, ஏக்கர் வரி மற்றும் நீர்க் கட்டண வருமானம் ரூபா. 1,839,003 அறவிடப்பட வேண்டியிருந்தது.

**2.2.4 வாடகை**

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியன்று அறவிடப்பட வேண்டிய கடை வாடகை மற்றும் குத்தகை வாடகை ரூபா. 137,406 ஆக இருந்ததுடன் 2011 ஆம் ஆண்டிலிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா. 22,511 அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.5 அனுமதிப்பத்திரக் கட்டணம்**

மீளாய்வாண்டின் அனுமதிப்பத்திரக் கட்டணமாக ரூபா. 768,300 மதிப்பிடப்பட்டிருந்த போதும் உள்ளவாறான வருமானம் ரூபா. 566,995 ஆக இருந்தது.

**2.2.6 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் இருந்தும் ஏனைய அதிகாரிகளிடம் இருந்தும் 2017 திசெம்பர் 31 அன்று பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 6,284,741 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 68,667,268 ஆகவிருந்தது.

**03. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுச் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல், மக்களின் நலனோம்புகை மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பான வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

**(அ) உப விதிகள்**

பிரதேச சபை சட்டத்தின் 126 ஆவது பிரிவிற்கமைவாக 30 பிரதான செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக உப விதிகள் உருவாக்கப்பட வேண்டியிருந்த போதும் 2017 திசெம்பர் 31 ஆம் திகதியாகும் வரை 16 செயற்பாடுகளுக்காக மாத்திரம் உப விதிகள் உருவாக்கப்பட்டிருந்தன.

**(ஆ) எதிர்பார்த்த நிறைவு மட்டத்தினை அடையாமை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) கிராமியப் பிரதேசங்களில் 1000 கி.மீ வீதிகளை அபிவிருத்தி செய்தல் வேலைத்திட்டம் - 2017 இற்கமைவாக ரூபா. 6,000,000 செலவில் 06 வீதிகளை அபிவிருத்தி செய்வதற்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு 2017 மே மாதம் ஆகும் பொழுது அனுமதி பெறப்பட்ட போதும் 2017 ஒக்தோபர் வரை 04 வீதிகளின் அபிவிருத்தி வேலைகள் ஆரம்பிக்கப்படாது இருந்ததுடன் 02 வீதிகளின் அபிவிருத்தி வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன.

(ii) கிராமிய வீதி அபிவிருத்தி திட்டம் - 2017 இன் மூலம் ரூபா. 8,948,357 செலவில் 05 பிரதேச வீதிகளின் அபிவிருத்தி வேலைகள் 2017 நவம்பர் 15 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் நிறைவு செய்யப்பட வேண்டியிருந்த போதும் அப்பாதை அபிவிருத்தி வேலைகள் 2017 ஒக்டோபர் 10 ஆம் திகதி வரை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) திண்மக்கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

உக்காத கழிவுகள் அகற்றப்படும் போது பேல் இயந்திரம் பயன்படுத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் சம்பிரதாயபூர்வ அடிப்படையில் காலால் மிதித்து தொழிலாளர்களினால் இச்செயற்பாடு மேற்கொள்ளப்பட்டு வந்தது. மேலும் இவந சிதைவடையாத கழிவுகளை சேமித்து வைப்பதற்காக எவ்வித ஏற்பாடும் செய்யப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) சுற்றாடல் சார்ந்த பிரச்சினைகள்**

2017 ஆம் ஆண்டில் சபையின் அனுமதியின்றி 06 இடங்களில் 23 ஏக்கர் 02 ரூட் 13.8 பேர்ச் நிலம் வீடுகள் மற்றும் சொத்துக்களாக அபிவிருத்தி செய்யப்பட்டிருந்ததுடன் அதன் மூலம் ஏற்படும் சுற்றாடல் சார்ந்த பிரச்சினைகள் தொடர்பான ஆய்வு சபையினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(உ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) ''நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் 2030'' தொடர்பான விரிவான அறிவு சபையிடம் காணப்படாமை காரணமாக நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் நோக்கங்களை இனங்காணல், அதற்கொத்த திட்டங்களை வடிவமைத்தல், நிதி ஒதுக்கீடு செய்துகொள்ளல், ஊக்கமுள்ள பிரிவினரை இனங்கண்டு கொள்ளல் மற்றும் அது தொடர்பான அளவீடுகள் மற்றும் தரவுகளை திரட்டிக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் நோக்கங்கள் மீது மோசமான தாக்கம் செலுத்தும் வீடுகள் மற்றும் சொத்துக்கள் முறையற்ற விதத்தில் அபிவிருத்தி செய்யப்படுவதைத் தடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2 மனித வள முகாமைத்துவம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 02 வேலை காப்பாளர் பதவிகளுக்கான ஆட்சேர்ப்பின் போது வழங்கப்பட்ட சான்றிதழ்களின் உண்மைத்தன்மை அச் சான்றிதழ்களை வழங்கிய நிறுவனங்கள் மூலம் உறுதிப்படுத்திக் கொள்ளப்படாதிருந்ததுடன் கடமை நிர்வாகி பதவிகள் தொடர்பிலான சபையின் ஆட்சேர்ப்பு வழிகாட்டல் கோவை மற்றும் அதனுடன் தொடர்பான அடிப்படை தகுதிகள் தொடர்பான உறுதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) 2014 நவம்பர் 12 ஆம் திகதிய 25/2014 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுக்கமைய நிரந்தர பதவிகள் வழங்குகையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட அமைய பதவிகளுடன் தொடர்பான வகையில் நிரந்தரப் பதவிகள் வழங்கப்படல் வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்த போதும் சுகாதார

ஊழியர்கள் (அமைய) இருவருக்காக கடமை நிர்வாகி பதவிகளில் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டிருந்தது.

(இ) பழைய காரியாலயக் கட்டிடத் தொகுதியின் 03 தொழிலாளர்களின் வேலை மேற்பார்வைக்காக நியமிக்கப்பட்டிருந்த வேலைக் காப்பாளர் முறையாக கடமை மேற்பார்வை நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கவில்லை.

(ஈ) 2013 ஜனவரி 01 ஆம் திகதிய முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதிக்கப்பட்ட பதவியணி மீளாய்வு அறிக்கைக்கமைவாக MN-01-2006/A வகை வேலை காப்பாளர் பதவிக்கான நியமன பொறுப்பதிகாரி மேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவாக இருந்த போதிலும் சபையின் கடமைகளை நிர்வகிக்கின்ற வேலை காப்பாளர்கள் இருவருக்கும் சபையினால் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டிருந்தன.

### 3.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

2016 ஆம் ஆண்டில் சபையின் அனுமதியோ அங்கீகாரமோ இல்லாது 02 பாதைகளுக்கு 2017 செப்டம்பர் மாதத்தில் ரூபா. 2,217,000 பெறுமதிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு 75 வீதமான வேலைகள் முடிவடைந்துள்ளதென நம்பத்தகுந்த தகவல்களைக் குறிப்பிட்டு நிதியினைப் பெற்றுக்கொள்வதற்காக உள்ளூராட்சித் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.4.1 பொறுப்பேற்கப்படாத சொத்துக்கள்

சபையினால் பயன்படுத்தப்படும் 02 வாகனங்கள், ஒரு விளையாட்டரங்கு மற்றும் 44 பொது மயானங்கள் ஆகியவற்றை பொறுப்பேற்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

#### 3.3.2 விளைவற்ற / குறை பயன்பாட்டுச் சொத்துக்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்குச் சொந்தமான வேன் ஒன்று 2012, 2014 மற்றும் 2016 ஆகிய வருடங்களில் 04 சந்தர்ப்பங்களில் ரூபா. 1,283,845 செலவில் திருத்தியமைக்கப்பட்டிருந்த போதும், தொடர்ந்தும் காணப்பட்ட குறைபாடுகள் காரணமாக ஓடும் நிலையில் காணப்படவில்லை. வாகனத்தின் வருமான அனுமதிப்பத்திரம் மற்றும் காப்புறுதிப் பத்திரம் ஆகியன பெறப்படாது இருந்ததுடன், 2015 பெப்ரவரி 11 ஆம் திகதி முதல் 03 வருடங்களை அண்மித்த காலப்பகுதியில் பாவனையிலிருந்து ஒதுக்கப்பட்டு வாகனத் தரிப்பிடத்தில் நிறுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 2016 திசெம்பர் 24 ஆம் திகதி ரூபா. 504,878 செலவில் கொல்லுபிடியவத்த சிறுவர் பூங்காவிற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த விளையாட்டு உபகரணங்களை மீளாய்வாண்டின் இறுதி வரை பொருத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாது செயலற்றுக் காணப்பட்டது.

(இ) 8x4 அடி விசாலமான 45 அஸ்பெஸ்டஸ் தகடுகள் மற்றும் கூரை பொருத்துவதற்காகப் பயன்படுத்தப்படும் கொங்கிரீட் தூண்கள் பல வருடங்களாகப் பயன்படுத்தப்படாது காணப்பட்டன.

## 3.6 பெறுகை

### 3.6.1 பெறுகை திட்டம்

பெறுகை வழிகாட்டிக் கோவை 2.4.1 பிரகாரம் மீளாய்வாண்டிற்காக பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.6.2 வழங்கல் மற்றும் சேவைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) எதிர்பார்க்கப்பட்ட பாவனை தொடர்பான திட்டமொன்று இன்றி பாரவுருளியொன்றைக் கொள்வனவு செய்வதற்கான விலைமனுக் கோருவதற்காக 03 பத்திரிகைகளில் விளம்பரம் பிரசுரிப்பதற்காக 2017 ஆம் ஆண்டு ஜுன் மாதம் ரூபா. 24,984 செலுத்தப்பட்டிருந்த போதும் அக்கொள்வனவு 2018 ஏப்ரல் மாதம் வரை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கொல்லுபிடியவத்த சிறுவர் பூங்காவிற்கான விளையாட்டு உபகரணங்களுக்கான விலைமனு சமர்ப்பிக்கையில் அவ்வுபகரணங்களை விநியோகம் செய்து பொருத்தித் தர வேண்டுமென அறிவிக்கப்பட்டிருந்த போதும் அவ்வுபகரணங்கள் பொருத்தப்படாது குறித்த நிறுவனத்திற்கு ரூபா. 504,878 செலுத்தப்பட்டிருந்தது.

## 4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

08 மீண்டெழும் செலவுத் தலைப்புகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா. 77,734,000 இல் ரூபா. 59,333,309 செலவிடப்பட்டிருந்தமையினால் ரூபா. 18,400,691 மீதமாகவிருந்தது. மொத்த மீதியினுள் 33 திட்டங்கள் முழுமையாக செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

மீளாய்வாண்டிற்காக போதிய உள்ளக கணக்காய்வு மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் 04 சந்தர்ப்பங்களில் மாத்திரம் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் அவ்வறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 05. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது சபையின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளதுடன் கீழ்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

| முறைமைகள் | குறைபாடுகள் |
|---|---|
| (அ) கணக்கீட்டுச் செயற்பாடு | (i) கட்டுப்பாட்டுக் கணக்குகள் இணக்கமின்மை |
| | (ii) சொத்துக்கள் மூலதனப்படுத்தப்படாமை |
| (ஆ) நிலையான சொத்துக்கள் | (i) காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பான பௌதீக ஆய்வு மேற்கொள்ளப்படாமை |
| | (ii) நிலையான சொத்துகள் பேரேடு இற்றைப்படுத்தப்படாமை |
| | (iii) காணி கட்டிடங்களை இனங்காணும் செயன்முறை முறையாகக் காணப்படாமை |

| | | |
|---|---|---|
| (இ) | வருமானம் | நிலுவை வருமானங்களை உரிய காலத்தினுள் அறவிடாமை |
| (ஈ) | ஓப்பந்த நிர்வாகம் | நிர்மாண நடவடிக்கைகள் குறித்த காலத்தினுள் நிறைவு செய்யப்படாமை |
| (உ) | பெறுகைகள் | பெறுகை நடவடிக்கைகள் குறித்த சட்ட திட்டங்களுக்கமைவாக மேற்கொள்ளப்படாமை |